# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2117/17 - 2019 අප්‍රේල් මස 03 වැනි බදාදා - 2019.04.03

*2117/17 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 65/51* II

**இலங்கைப் புகையிரதச் சேவை சீருடைப் பணியாட்டொகுதியினர் தண்ணளி நிதியக் கட்டளைச் சட்டம்**

*(284 ஆம் அத்தியாயமான) புகையிரதச் சேவை சீருடைப் பணியாட்டொகுதியினர் தண்ணளி நிதியக் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின்கீழ், இலங்கைப் புகையிரதச் சேவை சீருடைப் பணியாட்டொகுதியினர் தண்ணளி நிதியமென அறியப்பட்ட கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்டவையும் மேற்சொல்லப்பட்ட பிரிவினால் நிதி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு அவரினால் அளிக்கப்பட்டவையுமான விதிகள்.*

செயலாளர்,
*நிதி அமைச்சு.*

கொழும்பு,
*2019, ஏப்பிறல் 03.*

விதிகள்

*காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1948 ஆம் ஆண்டு யூலை மாதம் 6 ஆந் திகதிய 305 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையும், 2016, மாச்சு 30 ஆந் திகதிய 1960/ 36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானவையுமான விதிகள் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :-*




*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1. இருபத்தியிரண்டாம் விதியில்–

(அ) அதன் (1) ஆம் பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"22. (1) உறுப்பாண்மையின் ஓராண்டு காலப்பகுதி ஒன்றைப் பூர்த்தி செய்துள்ளவரும், பன்னிரண்டு மாத காலப்பகுதி ஒன்றிற்கென உறுப்பாண்மைக் கட்டணங்களைத் தொடர்ச்சியாக செலுத்தியுள்ளவருமான எவரேனும் உறுப்பினர் பின்வரும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு உறுப்பாண்மைக் காலப்பகுதி ஒன்றிற்கு நேரொத்ததான அத்தகைய தொகையின் விசேட கடனொன்றிற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

**அட்டவணை**

| இலக்கம் | உறுப்பாண்மைக் காலப்பகுதி (ஆண்டுகளில்) | கடன் தொகை |
|---|---|---|
| 1. | 01-05 | 25,000/- |
| 2. | 05-10 | 50,000/- |
| 3. | 10-15 | 1,00,000/- |
| 4. | 15 இற்கு மேற்பட்ட | 1,50,000/- |

".

(ஆ) அதன் 8 ஆம் பந்திக்கான அட்டவணையை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

**"அட்டவணை**

| இல. | கடன் தொகை (ரூபா) | ஆறு மாதங்களில் 04 தவணைக் கட்டணங்கள் (ரூபா) | வட்டி 12 சத வீதத்தில் (ரூபா) | பன்னிரண்டு மாதங்களில் 10 தவணைக் கட்டணங்கள் (ரூபா) | வட்டி 12 சத வீதத்தில் (ரூபா) | பதினெட்டு மாதங்களில் 16 தவணைக் கட்டணங்கள் (ரூபா) | வட்டி 12 சத வீதத்தில் (ரூபா) | இருபத்திநான்கு மாதங்களில் 22 தவணைக் கட்டணங்கள் (ரூபா) | வட்டி 12 சத வீதத்தில் (ரூபா) | முப்பத்தியாறு மாதங்களில் 34 தவணைக் கட்டணங்கள் (ரூபா) | வட்டி 12 சத வீதத்தில் (ரூபா) | நாற்பத்தெட்டு மாதங்களில் 46 தவணைக் கட்டணங்கள் (ரூபா) | வட்டி 12 சத வீதத்தில் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 25,000 | 6,250 | 375 | 2,500 | 300 | 1,563 | 281 | 1,137 | 273 | 735 | 265 | - | - |
| 2. | 50,000 | 12,500 | 750 | 5,000 | 600 | 3,125 | 563 | 2,273 | 546 | 1,471 | 529 | - | - |
| 3. | 1,00,000 | 25,000 | 1,500 | 10,000 | 1,200 | 3,125 | 1,125 | 4,546 | 1,091 | 2,942 | 1,058 | 2,174 | 1,044 |
| 4. | 1,50,000 | - | - | 15,000 | 1,800 | 9,375 | 1,688 | 6,819 | 1,637 | 4,412 | 1,588 | 3,261 | 1,566 |

".

04-606

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.